செ.வெ.எண்: 63 நாள்: 31.07.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களின் நலன் கருதி திங்கள்கிழமை தோறும் "காணொளி குறைதீர் கூட்டம்" என்ற திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. பொதுமக்கள் வீட்டில் இருந்தே குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கைகளை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.A.அருண் தம்புராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கொரோனா பெருந்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக பொதுமக்கள் ஒரே இடத்தில் அதிக அளவில் கூடுவதை தவிர்க்கும் விதமாக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் திங்கள்கிழமைதோறும் நடைபெற்றுவந்த மனுநீதிநாள் முகாம்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களின் நலன் கருதி காணொளிக்காட்சி வாயிலாக திங்கள்கிழமைதோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. **"காணொளி குறைதீர் கூட்டம்"** என்ற பெயரில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

பொதுமக்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே இந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாக தங்கள் குறைகளை தெரிவிக்கலாம். இக்கூட்டத்தில் அனைத்துத்துறைகளின் அரசு உயர் அலுவலர்களும் காணொளி வாயிலாக பங்கேற்பார்கள். எனவே, பொதுமக்களின் கோரிக்கைகள் உடனடி ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**இந்த "காணொளி குறைதீர் கூட்டம்"கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் முதலில் தங்களது செல்போனில் BharatVC என்ற செயலியை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். https://bharatvc.nic.in/viewer/3976520314 என்ற லிங்கை கொடுத்து அதில் password என்ற இடத்தில் 573133 என்ற கொடுத்தால் தாங்கள் காணொளிவாயிலாக குறைதீர்க்கூட்டத்தில் இணைக்கப்படுவீர்கள்.**

**இதுதொடர்பான மேலும் விபரங்களை https://www.nagapattinam.nic.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக தெரிந்துகொள்ளலாம். வாரந்தோறும் திங்கள்கிழமைகளில் காலை 11 மணிக்கு இந்தக்கூட்டம் நடைபெறும். கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் நபர்கள் காலை 10.30 மணி முதல் காணொளிக்கூட்டத்தில் இணையலாம்.**

அதிக எண்ணிக்கையிலான மக்கள் இக்கூட்டத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வகையில், கோரிக்கைகளை தெரிவிப்பவர்கள் சுருக்கமாக தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

| Bharat VC App Download Link<br>செயலியைப் பெற | Bharat VC joining Link<br>காணொளி கூட்டத்தில் இணைய |
|---|---|
| | |

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.